**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.378/2021**

**Prosecution Witness : 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : ஜோதி | **Caste** | : | |
| **Husband Name** | : சங்கர் | **Calling** | : | கூலி வேலை |
| **Village** | : குரும்பப்பட்டி | **Religion** | : | |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : | **38/2026** |
| | | **Dated** | : | **03.02.2026** |

**03.02.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 2 **திருமதி. ஜோதி** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 2** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் திண்டுக்கல் மேற்கு மீனாட்சிநாயக்கன்பட்டி குரும்பப்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்துவருகிறேன். ஆ.சா.1 சங்கர் எனது கணவர். ஆஜர் எதிரிகள் எனது பக்கத்து வீட்டைச் சேர்ந்தவர்கள். எனது அத்தைப்பையன் சந்தோஷ் எதிரிகளின் பெரியப்பாவான ராஜேந்திரனுக்கு பணம் கொடுத்துள்ளார். ரொம்ப நாட்களாக பணம் திருப்பித்தராததால் பணத்தை கேட்டபொழுது அவர்களுக்கு பிரச்சனை ஏற்பட்டுள்ளது.

எனது கணவராக அ.சா.1 அப்பொழுது அங்கு சென்று ராஜேந்திரனிடம் என்னை சாட்சியாக வைத்துதானே சந்தோஷ் பணம் கொடுத்தார். இப்போது இல்லை என்று சொல்வது சரியல்ல . அப்போது ராஜேந்திரன் கெட்டவார்த்தை பேசியதால் அங்கிருந்து எனது கணவர் அ.சா.1 வீட்டிற்கு வந்துவிட்டார். 02.08.2020 ம் தேதி மாலை 05.30 மணியளவில் எனது வீட்டிற்கு வந்த ஆஜர் எதிரிகள் கெட்டவார்த்தையால் திட்டி சூர்யா இரும்புகம்பியால் எனது கணவரின் தலையில் அடித்தார். அதனால் இரத்த காயம் ஏற்பட்டது. வேலுவும் கட்டையால் உடம்பில் அடித்தால் ஊமைக்காயம் ஏற்பட்டது. அதனால் அருகில் இருந்தவர்கள் சிகிச்சைக்காக எனது கணவரை சேர்த்தார்கள். அங்கு சிகிச்சையில் இருந்தபோது போலிசார் எனது கணவரை விசாரித்து புகார்வாக்குமூலம் பெற்றார்கள். அதில் சாட்சியாக நான் கையொப்பம் செய்தேன். **சாட்சிக்கையொப்பம் ஆ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

சந்தோஷ் என்பவர் எதிரிகளின் பெரியப்பாவிற்கு எவ்வளவு பணம் மற்றும் எந்த தேதியில் கொடுத்தார் என்று எனது புகார் வாக்குமூலத்திலோ அல்லது போலிசார் விசாரணையிலோ கூறவில்லை என்றால் சரிதான். ராஜேந்திரனிடம் எனது கணவர் 05.30 மணிக்கு பணம் கேட்டு பிரச்சனை ஏற்பட்டது என்றால் ராஜேந்திரன் வீட்டிற்கு செல்லவில்லை. அதற்கு இடையில் இருக்கும் இடத்தில் தான் நடந்தது. என் கணவரை எதிரிகள் அடித்த கம்பியின் நீளம் மற்றும் அகலம் பற்றி போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சண்டை நடந்துகொண்டிருந்தபோது நான் விலக்கிவிட்டதாகவோ சத்தம் போட்டதாகவோ போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது கணவர் ராஜேந்திரனிடம் பணம் கேட்டு எத்தனை மணிக்கு வீட்டிற்கு திரும்பி வந்தார் என்றால் 05.30 மணிக்கே வந்துவிட்டார். எனது வீட்டு வாசலில் தான் சண்டை நடந்ததாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

எனது கணவருக்கும் எதிரிகளுக்கும் முன்விரோதம் ஏதும் உள்ளதா என்றால் முன்விரோதம் ஏதும் இல்லை. எனது கணவரை யார் யார் மருத்துவமனைக்கு அழைத்துசென்றார்கள் என்று போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். போலிசார் சம்பவத்தன்று என்னிடம் எத்தனை மணிக்கு சாட்சிகையொப்பம் வாங்கினார்கள் என்றால் காலை 10.00 மணியளவில் பெற்றார்கள். போலிசார் சம்பவத்தேதியன்று என்னை விசாரித்தாகள் என்றால் சரிதான்.

02.08.2020ம் தேதி அன்று எதிரிகள் எனது கணவரை ஆபாசமான வார்த்தைகளால் திட்டவும் இல்லை என்றாலும் கம்பியால் அடிக்கவும் இல்லை என்றாலும் சந்தோஷ் என்பவர் எனது உறவினர் என்பதால் அ.சா.1 எனது கணவர் என்பதாலும் ராஜேந்திரன் என்பவரின் தம்பி மகன்கள் எதிரிகள் என்பதாலும் எதிரிகளுக்கு எதிராக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொன்னது போல் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C Digitally signed by DINESH KUMAR C Date: 2026.02.03 10:37:05 +0530

Judicial Magistrate No.II

Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.378/2021**

**Prosecution Witness : 1**

| | | | | |
|---|---|---|---|---|
| **Name** | : சங்கர் | **Caste** | : | |
| **Father's Name** | : பெரியசாமி | **Calling** | : | செண்ட்ரிங் வேலை |
| **Village** | : குரும்பப்பட்டி | **Religion** | : | |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : | **45/2026** |
| | | **Dated** | : | **03.02.2026** |

**03.02.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 1 **திரு. சங்கர்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 1** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் திண்டுக்கல் மேற்கு மீனாட்சிநாயக்கன்பட்டி குரும்பப்பட்டியில் குடியிருந்து செண்ட்ரிங் வேலை செய்துவருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எனது ஊரைச்சேர்ந்தவர்கள். ராஜேந்திரன் என்பவர் எனது தம்பிமுறையான சந்தோஷ் என்பவரிடம் வேலை விசயமாக பணம் வாங்கியிருந்தார். வாங்கிய பணத்தை திருப்பித்தரவில்லை அதனால் ராஜேந்திரனுக்கும் சந்தோஷ் என்பவருக்கும் வாக்குவாதம் நடந்தது. நான் அங்கு சென்று ராஜேந்திரன் பணம் வாங்கியது உண்மை என சொல்லி பணத்தை திருப்பிக்கொடுக்க சொன்னேன். அப்போது என்னுடனும் ராஜேந்திரன் வாக்குவாதம் செய்தார்.

கடந்த 02.08.2020ம் தேதி மாலை 05.30 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது ராஜேந்திரனின் தம்பி மகன்களான சூர்யா மற்றும் வேலு இருவரும் எனது வீட்டி்ற்கு வந்து தேவடியாமகனே என திட்டி சூர்யா கையில் வைத்திருந்த இரும்புகம்பியால் எனது தலையில் அடித்து இரத்த காயத்தை ஏற்படுத்தினார். சூர்யாவின் தம்பி வேலு கையில் வைத்திருந்த இரும்பு கம்பியால் எனது உடம்பில் பல இடங்களில் அடித்து ஊமைக்காயத்தை ஏற்படுத்தினார். நான் கத்தியதால் ஊரில் இருந்தவர்கள் வரவும் என்னைப்பார்த்து கொல்லாமல் விடமாட்டேன் என சொல்லி அங்கிருந்து ஓடிவிட்டார்கள். ஊரில் இருந்தவர்கள் என்னை GHக்கு அழைத்துச்சென்று சிகிச்சைக்கு சேர்த்தார்கள். சிகிச்சையில் இருந்தபோது போலிசார் வந்து நடந்த விவரங்களை கேட்டு எழுதி என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். அதில் சாட்சியாக எனது மனைவி ஜோதி கையொப்பம் செய்தார். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான்கொடுத்தது . அதில் உள்ள கையொப்பம் என்னுடையது.புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சந்தோஷ் என்பவர் எதிரிகளின் பெரியப்பாவிற்கு எவ்வளவு பணம் மற்றும் எந்த தேதியில் கொடுத்தார் என்று எனது புகார் வாக்குமூலத்திலோ அல்லது போலிசார் விசாரணையிலோ கூறவில்லை என்றால் சரிதான். எதிரிகள் எப்போது எத்தனை மணிக்கு எனது வீட்டிற்கு வந்து பிரச்சனை செய்தார்கள் என்று எனது புகார் வாக்குமூலத்திலோ அல்லது போலிசார் விசாரணையிலோ கூறவில்லை என்றால் 05.30 மணி என்று கூறியுள்ளேன். ராஜேந்திரனிடம் நான் 05.30 மணிக்கு பணம் கேட்டு பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான்.

என்னை எதிரிகள் அடித்த கம்பியின் நீளம் மற்றும் அகலம் பற்றி தெரியுமா என்றால் அடித்தவுடன் மயங்கியதால் நான் சரியாக பார்க்கவில்லை, சுமார் 2 அடி இருக்கும். சம்பவத்தன்று யார், எத்தனை மணிக்கு என்னிடம் புகார்வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் போலிசார் வாங்கினார்கள் எத்தனை மணி என்று எனக்கு நினைவில் இல்லை. என்னுடைய வீடு எதிரியின் வீட்டிற்கு அருகில் உள்ளது என்றால் சரிதான்.

சண்டை எனது வீட்டு வாசலில் தான் நடந்ததாக புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கும் எதிரிகளுக்கும் முன்விரோதம் ஏதும் உள்ளதா என்றால் முன்விரோதம் ஏதும் இல்லை. 02.08.2020ம் தேதி அன்று எதிரிகள் என்னை ஆபாசமான வார்த்தைகளால் திட்டவும் இல்லை என்றாலும் கம்பியால் அடிக்கவும் இல்லை

என்றாலும் கொலைமிரட்டல் ஏதும் விடவில்லை என்றாலும் சந்தோஷ் என்பவர் எனது உறவினர் என்பதால் ராஜேந்திரன் என்பவரின் தம்பி மகன்கள் எதிரிகள் என்பதாலும் எதிரிகளுக்கு எதிராக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.02.03 10:39:48 +0530

Judicial Magistrate No.II
Dindigul.